2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு மிக முக்கியமான மானியக் கோரிக்கை. மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் பேச வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுக்கக் கோரும் கவன ஈர்ப்புகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.* Please sit down.

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் சிலை அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய கவிஞர்களில் ஒருவராக விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். கவிமணியின் பாடல்களில் உண்மையும், அழகும் கைகோர்த்துச் செல்வதை உணர முடியும். கவிமணி அவர்களை “இனிமைக் கவிஞர்”, “இளமைக் கவிஞர்”, “உண்மைக் கவிஞர்”, “உணர்ச்சிக் கவிஞர்” எனக் கூறுவது சாலப் பொருத்தமாக அமையும்.*

“தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது எனது செவிப் பெருமை” எனக் கூறியவர் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனதில் விதைத்து, உண்மைப் பயிரை செழித்தோங்கச் செய்கிறது; இவர் பாடல்களில் காணும்